**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
**எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.**
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

**ஆணை எண் 144/ந/2022**
**நாள்.17.10.2022**

திருமதி.D.முத்துமாரி,
நாகப்பட்டினம். – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
நாகப்பட்டினம் நகராட்சி. – எதிர் மனுதாரர்.

நாகப்பட்டினம், காடம்பாடி, சாலமன் தோட்டம், கதவு எண்.33 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி.D.முத்துமாரி என்பவரின் 09.09.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.09.2022 அன்று பெறப்பட்டு 144/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>ஆணை</u>**

நாகப்பட்டினம், காடம்பாடி, சாலமன் தோட்டம், கதவு எண்.33 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி.D.முத்துமாரி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“15–வது நிதிக்குழு மானியத்திட்டத்தின் கீழ் தாமரைக்குளம் தென்கரையில் சிறிய சந்தில் போடப்பட்ட சிமெண்ட் ரோடு, ஒப்பந்த விதிமுறைகளுக்கு மாறாக, தரமற்ற பொருட்களைக் கொண்டு, தரமற்ற முறையில் போடப்பட்டுள்ளது. மேலும் சாலை உரிய விதிகளின்படி சிமெண்ட் கான்கீரிட் போடப்படவில்லை, மில்லிங் செய்யப்படவில்லை. இந்தப்பணியை நகராட்சி பொறியாளர் அவர்கள் எந்தவித ஆய்வும் செய்யாமல் சுயலாபம் கருதி தரமற்ற முறையில் சாலை அமைத்த ஒப்பந்த பணிக்கு ஒப்புதல் வழங்கி ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்த தொகை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, சிமெண்ட் சாலைப்பணியை ஆய்வு செய்து, ஒப்பந்தபணியை சரிவர செய்யாத ஒப்பந்ததாரர் மீது உரிய நடவடிக்கை எடுத்தும் ஒப்பந்ததாரரை கருப்பு பட்டியலில் சேர்த்து, ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்த தொகையை திரும்பப் பெறவும் நடவடிக்கை எடுக்கவும் முறைகேடு நடக்க உடந்தையாக இருந்த நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர்

மற்றும் நகராட்சி பொறியாளர் மீது உரிய சட்டநடவடிக்கை எடுக்கும்படியும் பணிவுடன் வேண்டுகிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 20.09.2022 நாளிட்ட கடிதம் மூலம் நாகப்பட்டினம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

நாகப்பட்டினம் நகராட்சி ஆணையாளர் தனது 28.09.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

"நாகப்பட்டினம் நகராட்சியின் 15வது மத்திய நிதிக்குழு மான்ய நிதி 2021–22–ன் கீழ் நாகப்பட்டினம் நகராட்சி தாமரைக்குளம் தென்கரை குறுக்கு சந்து பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி ரூ 10.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 21.01.2022 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி பணியானது தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டின் படியும் உரிய விதிமுறைகளின்படியும் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. மேலும் அனைத்து கட்டுமான பொருட்களையும் பட்டுகோட்டை அண்ணா பல்கலைகழக தரக்கட்டுப்பாட்டு மையத்தில் ஆய்வுசெய்து ஆய்வறிக்கை பெறப்பட்ட பின்னரே கட்டுமானத்திற்கு பயன்படுத்தி பணி முடிக்கப்பட்டு வருகிறது. மேற்படி பணியை நகராட்சி பொறியாளர் எந்தவிதமான ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பது முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து திட்டப்பணிகளும் நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர் அவர்களால் நேரடியாக கள ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. புகாரில் தெரிவிக்கப்பட்ட பணியை நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் களஆய்வு செய்யப்பட்ட புகைப்படம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்பமை முறைமன்ற நடுவத்திற்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும், நாகப்பட்டினம் நகராட்சி ஆணையரும் 06.10.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.09.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) 06.10.2022 அன்றைய விசாரணைக்கு மனுதாரர் திருமதி.D.முத்துமாரி என்பவருக்கு உடல்நலம் சரியில்லாத காரணத்தினால் அவர் சார்பாக அவரது ஒன்றுவிட்ட சகோதாரர் திரு.எஸ்.ரகுநாதன் என்பவரை விசாரணைக்கு அனுமதியளிக்கும்படி கோரி மனுதாரர் திருமதி.D.முத்துமாரி அளித்த ஒப்புதல் கடிதத்தினை இம்முறைமன்ற நடுவம் ஏற்று, அதன்படி திரு.எஸ்.ரகுநாதன் என்பவர் பின்வருமாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"நாகப்பட்டினம் மாவட்டம் தாமரைக்குளம் தென்கரையில் போடப்பட்டுவரும் சிமெண்ட் சாலை விதிகளுக்கு முரணாக அதாவது பழைய சாலையை எடுத்துவிட்டு புதிய சாலையை போடாமல், பழைய சாலையின் மீதே புதிய சாலை போடப்பட்டுள்ளது. சாலையை போடும்போது ¾ ஜல்லி போடவில்லை. மேற்கண்ட தரமற்ற சாலையை ஆய்வு செய்யாமல் அதற்கான ஒப்பந்தத் தொகையும் நகராட்சியால் வழங்கப்பட்டுவிட்டது. எனவே, ஒப்பந்தப் பணியை சரிவர செய்யாத ஒப்பந்ததாரர் மீது உரிய நடவடிக்கை எடுத்திடவும், ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்

மற்றும் நகராட்சி பொறியாளர் மீது உரிய சட்டநடவடிக்கை எடுக்கும்படியும் பணிவுடன் வேண்டுகிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 20.09.2022 நாளிட்ட கடிதம் மூலம் நாகப்பட்டினம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

நாகப்பட்டினம் நகராட்சி ஆணையாளர் தனது 28.09.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

"நாகப்பட்டினம் நகராட்சியின் 15வது மத்திய நிதிக்குழு மான்ய நிதி 2021–22–ன் கீழ் நாகப்பட்டினம் நகராட்சி தாமரைக்குளம் தென்கரை குறுக்கு சந்து பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி ரூ 10.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 21.01.2022 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி பணியானது தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டின் படியும் உரிய விதிமுறைகளின்படியும் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. மேலும் அனைத்து கட்டுமான பொருட்களையும் பட்டுகோட்டை அண்ணா பல்கலைகழக தரக்கட்டுப்பாட்டு மையத்தில் ஆய்வுசெய்து ஆய்வறிக்கை பெறப்பட்ட பின்னரே கட்டுமானத்திற்கு பயன்படுத்தி பணி முடிக்கப்பட்டு வருகிறது. மேற்படி பணியை நகராட்சி பொறியாளர் எந்தவிதமான ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பது முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து திட்டப்பணிகளும் நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர் அவர்களால் நேரடியாக கள ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. புகாரில் தெரிவிக்கப்பட்ட பணியை நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் களஆய்வு செய்யப்பட்ட புகைப்படம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்பமை முறைமன்ற நடுவத்திற்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும், நாகப்பட்டினம் நகராட்சி ஆணையரும் 06.10.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.09.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) 06.10.2022 அன்றைய விசாரணைக்கு மனுதாரர் திருமதி.D.முத்துமாரி என்பவருக்கு உடல்நலம் சரியில்லாத காரணத்தினால் அவர் சார்பாக அவரது ஒன்றுவிட்ட சகோதரர் திரு.எஸ்.ரகுநாதன் என்பவரை விசாரணைக்கு அனுமதியளிக்கும்படி கோரி மனுதாரர் திருமதி.D.முத்துமாரி அளித்த ஒப்புதல் கடிதத்தினை இம்முறைமன்ற நடுவம் ஏற்று, அதன்படி திரு.எஸ்.ரகுநாதன் என்பவர் பின்வருமாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"நாகப்பட்டினம் மாவட்டம் தாமரைக்குளம் தென்கரையில் போடப்பட்டுவரும் சிமெண்ட் சாலை விதிகளுக்கு முரணாக அதாவது பழைய சாலையை எடுத்துவிட்டு புதிய சாலையை போடாமல், பழைய சாலையின் மீதே புதிய சாலை போடப்பட்டுள்ளது. சாலையை போடும்போது ¾ ஜல்லி போடவில்லை. மேற்கண்ட தரமற்ற சாலையை ஆய்வு செய்யாமல் அதற்கான ஒப்பந்தத் தொகையும் நகராட்சியால் வழங்கப்பட்டுவிட்டது. எனவே, ஒப்பந்தப் பணியை சரிவர செய்யாத ஒப்பந்ததாரர் மீது உரிய நடவடிக்கை எடுத்திடவும், ஒப்பந்ததாருக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்

தொகையை திரும்பப் பெறவும், முறைகேடு நடைபெற உறுதுணையாக இருந்த நகராட்சி அலுவலர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான நாகப்பட்டினம் நகராட்சி ஆணையாளர் திருமதி. ந. ஸ்ரீதேவி மற்றும் நகராட்சிப் பொறியாளர் திரு.எம். ஜெயகிருஷ்ணன் ஆகியோர் 06.10.2022 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்கள்:

''நாகப்பட்டினம் தாமரைக்குளம் தென்கரை குறுக்கு சந்து பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி ரூ 10 லட்சம் மதிப்பீட்டில் உரிய விதிமுறைகளின்படி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. கட்டுமானப் பொருட்கள் அண்ணா பல்கலைக்கழக தரக்கட்டுப்பாட்டு மையத்தில் ஆய்வு மேற்கொண்டு, ஆய்வறிக்கை பெற்ற பின்னர்தான் மேற்கண்ட சாலைப் பணி முடிக்கப்பட்டது. மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு ஏற்கனவே இருந்த சாலையின் மீது புதிய சாலை போடப்படவில்லை. அங்கு ஏற்கனவே, மணல் சாலைதான் இருந்து வந்தது. அதன் மீதுதான் புதிய சாலை போடப்பட்டது. புதிய சாலையை போடும்போது நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சிப் பொறியாளர் ஆகிய எங்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்.

மேலும் இந்நேர்வு தொடர்பாக நாகப்பட்டினம் நகராட்சி ஆணையாளரான எனது 28.9.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் விளக்கமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளார்கள்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், நாகப்பட்டினம் நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

''நாகப்பட்டினம், காடம்பாடியை சார்ந்த மனுதாரர் திருமதி.D.முத்துமாரி என்பவர் தனது முறையீட்டு மனுவில் நாகப்பட்டினம் மாவட்டம், தாமரைக்குளம் தென்கரையிலுள்ள சாலையில் ஒப்பந்ததாரர் மூலம் ஆய்வு செய்யாமல் ஏற்கனவே போடப்பட்ட சாலையின்மீது தரமற்ற சிமெண்ட் சாலையினை அமைத்ததன் மூலம் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது எனவும், முறைகேட்டிற்கு உடந்தையாக இருந்த நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட தாமரைக்குளம் தென்கரை குறுக்கு சந்தில் 15–வது மத்திய நிதிக்குழு மானிய நிதி 2021–22–ன் கீழ், ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளை பின்பற்றி ரூ 10 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலையினை அமைக்க கட்டுமானப் பொருட்களின் தரத்தினை பட்டுகோட்டை அண்ணா பல்கலைகழக தரக்கட்டுப்பாட்டு மையத்தின் மூலம் ஆய்வு

செய்தபின், அதன் அறிக்கையினை பெற்ற பின்னரே சாலைப் பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருவதை பல்கலைக்கழக ஆய்வறிக்கையின் மூலம் தெரிய வருகிறது.

மேலும் சாலை அமைக்கும் பணியினை நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் நேரடியாக ஆய்வு செய்து, ஏற்கனவே இருந்த மணல்சாலைக்கு பதிலாக புதிதாக சிமெண்ட் சாலை போடப்பட்டதை ஆவணங்களின் மூலம் அறியமுடிகிறது.

இச்சூழ்நிலையில் மனுதாரர் தனது புகாரினை நிரூபிக்கும் வகையில் போதிய ஆதார ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத நிலையில், நாகப்பட்டினம் நகராட்சி ஆணையரின் அறிக்கையினை ஏற்று, இம்மனு மீதான நடவடிக்கையினை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி.D.முத்துமாரி,
எண். 33, சாலமன் தோட்டம்,
காடம்பாடி, நாகப்பட்டினம்.

2) ஆணையாளர்,
நாகப்பட்டினம் நகராட்சி.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலருக்காக